இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1981 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, அரசாங்க குடிமனைகள் (ஆட்சி மீளப்பெறுதல்) (திருத்தச்) சட்டம்

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1981, மாச்சு மாதம் 06 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 35 தபாற் செலவு ; சதம் 50

## 1981 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப்பெறுதல்) (திருத்தச்) சட்டம்

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. [illegible]/80
1335

**1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம் 1981 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப்பெறுதல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும், 1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரசாங்கக் குடிமனைகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் விரிவுப் பெயரானது, "அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பில்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பில் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அதன் சார்பில்" என்ற சொற்றொடரை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*"வெளியேற்று மறிவித்தலைத் திரும்பப் பெறுதல் அல்லது இடைநிறுத்தல்.*

5. தகுதிவாய்ந்த அதிகாரி எக்கட்டத்திலும் வெளியேற்றுமறிவித்தல் எதனையும் திரும்பப் பெறலாம் அல்லது அவர் தகுந்ததெனக் கருதும் அத்தகைய காலப் பகுதிக்கு அதன் செயற்பாட்டை இடைநிறுத்தி வைக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(அ) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்னும் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

""தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது—

(அ) அரசாங்கக் குடிமனைகள் தொடர்பாக, அரசாங்க நிருவாகம் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவராக இருப்பதற்கென அத்தகைய செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலர் ;

(ஆ) பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றிற்குச் சொந்தமாகவுள்ள குடிமனைகள் தொடர்பாக,—

(i) அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவராக இருப்பதற்கென அத்தகைய தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ; அல்லது

[illegible] 52769—6,425 (11/80)

(ii) அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்குத் தவிசாளர் எவரும் இல்லாதவிடத்து, அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சினது செயலாளர் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவராக இருப்பதற்கென அத்தகைய செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்,

எனப் பொருளாகும்;';

(ஆ) "அரசாங்கக் குடிமனைகள்" என்ற வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் :—

'"அரசாங்கக் குடிமனைகள்" என்பது, அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்தின் சார்பில் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் எவரேனும் ஆளுக்கு ஏற்பாடுசெய்யப்படுவதும், வதிவிடப் பயன்பாட்டுக்கென இருப்பாட்சி செய்யப்படுவதுமான ஏதேனும் கட்டடம் அல்லது அறை அல்லது வேறு இடவசதி எனப் பொருளாகும் என்பதுடன், அத்தகைய கட்டடம் அல்லது அறை அல்லது வேறு இடவசதி அமைந்துள்ள ஏதேனும் காணியையும் அல்லது வளவுகளையும் உள்ளடக்கும்; ஆனால், தேசிய வீடமைப்புச் சட்டத்தின் V ஆம் பாகம் அதற்கு ஏற்புடைத்தாவதும், தேசிய வீடமைப்பு ஆணையாளரினால் ஏற்பாடு செய்யப்படுவதுமான ஏதேனும் வீட்டை உள்ளடக்காது;'; அத்துடன்

(இ) "இருப்பாட்சியாளர்" என்ற வரைவிலக்கணத்தை நேர் உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

'"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியம் என்றவகையாக, கடன் என்ற வகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளுடன், அல்லது மூலதனத்துடன் கம்பெனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது கம்பெனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்.'.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும், சந்தாப்பணங்கள் விடயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்திரம் அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.